RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s625

OPEN ACCESS

# சங்க இலக்கியப் பனுவல்களில் பாவை வழிபாடு

இரா. உஷா ராணி [அ, *]

[அ] தமிழ்த்துறை, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-636011, தமிழ்நாடு, இந்தியா.

# Worship of Pavai in Sangam Literature

R. Usha Rani [a, *]

[a] Department of Tamil, Padmavani Arts & Science College for Women, Salem-636 011, Tamil Nadu, India

* Corresponding Author: ushaarivu24@gmail.com

Received: 26-09-2021
Revised: 26-04-2022
Accepted: 08-05-2022
Published: 18-07-2022

Check for updates

**ABSTRACT**

Paavai worship is one of the invisible ancient forms of worship recorded in Sangam literary works. The word paavai appears in 53 places in Sangam literature. paavai deity. Playing object, Painting, Sculpture, Plant, Eye, Woman, Koothu are handled in many objects. Here the word paavai is taken for study only in the sense of deity. This paavai worship can be classified into two as Kollimalai paavai worship and water god puppet worship. The paavai that freezes in the Kolli Hills is very devastating. Received divinity. Natural disasters like wind, rain, thunder, lightning, do not spoil the beauty of this mountain. That is why the Kollimalai paavai is called the Maya natural paavai. The deity is frozen in caves, ditches and rocks. Kollimalai paavai is the guardian deity who threatens and guards Condor in the Kolli Hills. Sangam poets have compared it to a Kollimalai paavai as a testament to the beauty of women. The next paavai worship is the water worship. Worship of the water god paavai took place in the early morning of the month of Tai, in the hope that a good husband would be obtained by worshiping the water god paavai, good rain, and the country would prosper.

**Keywords:** Paavai Worship, Kollipaavai, Water God Worship, Antiquity Worship

## முன்னுரை

பண்டைய கால மனிதன் இயற்கையின் அற்புதங்களைக் கண்டு வியந்தான். இயற்கையின் சீற்றங்களைக் கண்டு அஞ்சினான். இயற்கையின் சீற்றத்தால் தனக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாமல் இருப்பதற்கு அவ்வியற்கையைத் தெய்வமாக வழிபடத் தொடங்கினான். இதுவே தொன்மை வழிபாட்டு முறையாகும். இவ்வழிபாட்டுமுறை அக்காலங்களில் தோன்றிய இலக்கியங்களில் காணப்படுகிறது. அவ்வகையில் பண்டைய இலக்கியங்களான சங்க இலக்கியப் பனுவல்களில் மலைகள் நீர்நிலைகள் தாவரங்கள் விலங்குகள் போன்றவற்றிலும் நெடிய தூண் தறி சுவர் மன்றம் பொதியில் இல்லம் போன்ற உயிரற்ற பொருட்களிலும் தெய்வம் உறைவதாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மேலும் நடுகல் வழிபாடு கொற்றவை வழிபாடு முருகு வழிபாடு பற்றிய செய்திகள் சங்க இலக்கியப் பனுவல்களில் காணப்படுகின்றன. இத்தகைய வழிபாட்டு முறைகளில் பாவை வழிபாடு குறித்து மட்டும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

## கொல்லிப்பாவை

சங்கப்பனுவல்கள் சுட்டும் மலைத்தெய்வங்களுள் அணங்கிற்கு அடுத்த மற்றொரு தெய்வம்

கொல்லிப்பாவை ஆகும். இக்கொல்லிப்பாவைத் தெய்வம் குறித்து ஆராய்வதற்குமுன்பு அவை பற்றிய புரிதலுக்காக முதலில் 'பாவை' என்றால் என்ன என்பது பற்றி ஆராயப்பெறுகின்றது.

## பாவை

சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களில் 'பாவை' எனும் சொல் 53 இடங்களில் பயின்று வந்துள்ளன. இப்பாவை "மன்றப் பாவை தெற்றிப்பாவை அல்லிப்பாவை கொல்லிப்பாவை எனப் பல்வேறு பாவைகள் மகளிர் வழிபாட்டிலும் விளையாட்டிலும் இடம்பெற்றன (Paandurangan, 2016)." இந்நான்கு வகையான பாவைகளுள் கொல்லிப்பாவை குறித்து மட்டும் ஆராயப் பெற்றுள்ளது. இப்பாவை எனும் இச்சொல் 1. தெய்வம் 2. விளையாடும் பொருள் 3. ஓவியம் சிற்பம் 4. தாவரம் 5. கண் 6.பெண் 7.கூத்து எனும் ஏழுவகையான பொருள்களில் கையாளப்பெற்றுள்ளன. (Vaiduriyammal, 2006) இந்த ஏழுவகையான பொருள்களில் இவ்வாய்வோடு தொடர்புடைய 'தெய்வம்' என்ற பொருள் குறித்து மட்டும் இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்று ஆராயப்பெற்றுள்ள.

## பாவைவழிபாட்டின் வகைகள்

சங்கப்பனுவல்களில் காணப்பெறும் தெய்வ வழிபாடுகளில் பாவை வழிபாட்டை 1. கொல்லிமலைப் பாவை வழிபாடு, 2. நீர்த்துறைத் தெய்வப் பாவை வழிபாடு என இரண்டு வகைப்படுத்தலாம்.

## 1. கொல்லிமலைப் பாவை வழிபாடு

சங்கப்பனுவல்கள் மலையில் உறையும் தெய்வங்களைக் கொல்லிமலைப் 'பாவை'என்று சுட்டுகின்றன. இப்பாவை குறித்து கொல்லிமலையிலே உறையும் தெய்வத்தைப் பாவை என்னுஞ் சொல் சுட்டி நிற்பதை இலக்கியங்கள் காட்டுகின்றன (Vaiduriyammal, 2006). கொல்லிமலையில் உறையும் மலைத்தெய்வம் மிகவும் பேரழகுவாய்ந்தது என்று நற்றிணை குறிப்பிடுகின்றது. (Balasubramaniyam, 2007) இவை கொல்லிப்பாவை பேரழகு வாய்ந்தது என்பதை வெளிப்படுத்துகின்றது. இப்பாவையைத் 'தெய்வப்பாவை' (குறுந்.100) என்று குறுந்தொகை குறிப்பிடுகின்றது (Nagarasan, 2007).

இவை கொல்லிமலையில் மேற்குப் பகுதியில் எழுதப் பெற்றிருக்கும் 'தெய்வப்பாவை' என்று சுட்டுகின்றது.

மலைகளில் உறைந்து காணப்பெறும் கொல்லிப்பாவை தெய்வத்தன்மை கொண்டது எனச் சங்கப்பனுவல்களில் காணமுடிகின்றன. "சித்திரம் எழுதவல்லானால் உருவாக்கப்பட்ட பாவையில் தெய்வத்தன்மை நிலைபெறும்" என்பதை மதுரைக்காஞ்சி சுட்டுகின்றது (Nagarasan, 2007). இதுவல்லான் ஒருவனால் செய்யப்பெற்ற அழகியபாவையில் தெய்வம் நிலைபெறும் என்பதை உணர்த்துகின்றது.

"கடவுள் எழுதியபாவை

மடவது மாண்ட மாஅயோளே"

என்கிறது (Jayabal, 2007). இப்பாடல் வரிகள் கடவுள் தன்மை பெறுமாறு அமைந்துள்ள கொல்லிப்பாவையினைப் போன்ற மடப்பத்தாள் என்று குறிப்பிடுகின்றன. இக்கருத்தின் மூலம் கொல்லிப்பாவைக் கடவுள் தன்மை பெறக்கூடியது என அறியலாம். கொல்லிப் பாவை கரிய கண்களையுடைய தெய்வத்தால் அம்மலையின் மேற்குப்புறத்தில் எழுதப்பெற்ற நல்ல இயல்பையுடையது என்பதை,

"கருங்கட் தெய்வம் குடவரை

நம்இயல் பாவை"

என்று பரணர் குறிப்பிடுகின்றார் (Nagarasan, 2007). இதுகண்டோரை மயக்கி, வீழ்த்தி உயிர்விடச் செய்யும் ஆற்றல் உடைய பாவை என்று சுட்டுகின்றன. கடவுளால் படைக்கப் பெற்ற 'பாவை' என்பதை,

"கொல்லி

நிலைபெறு கடவுள் ஆக்கிய

பலர்புகழ் பாவை"

என்கிறார் கல்லாடனார் (Jayabal, 2007). இப்பாடல் வரிகள் கொல்லிமலை வல்வில் ஓரிக்கு உரியது. அவ்வோரியைக் காரிவென்றான். ஆதலால் அம்மலை காரிக்குச் சொந்தமானது. காரி, சேரனுக்குக் கொடுத்தான் என்பதை உணர்த்துகின்றன. சங்கப் புலவர்கள் கொல்லிமலையில் உறைந்து காணப்பெறும் கொல்லிப் பாவையைத் தலைவிக்கு உவமையாகக் கையாண்டுள்ளனர்.

"……….. தெய்வம் எழுதிய

வினைமாண் பாவை"

என்ற நற்றிணைப் பாடல் கொல்லிமலையில் தெய்வத்தால் செய்துவைத்த செயற்கைத் தொழில் மாட்சிமைப்பட்ட பாவை என்று குறிப்பிடுகிறது. இப்பாடலின் கூற்றுப்படி 'தெய்வத்தால் உருவாக்கப் பெற்ற அழகுப் பாவை' என்பதை உணர்த்துகின்றது. (Balasubramaniyam, 2007)

சங்கப் புலவர்கள் தங்கள் பாக்களில் கொல்லிப் பாவையைப் 'பேரழகு உடையவளாய் குறிப்பிடுவதுடன் அழகிய மகளிர்க்கு உவமையாகக் கூறுவதையும் ஒருமரபாகக் கொண்டிருந்தனர்' என்பதை அவர்கள் இயற்றிய பனுவல்களில் (அகம்.98:12, 62:15-16, நற்.185:10-12, 319:7, 301:6, 362:1-2, குறுந்.100:5-6, 89:5-7) காணமுடிகின்றன. (Jayabal, 2007; Balasubramaniyam, 2007)

தெய்வம் உறைந்திருக்கும் மலை கொல்லிமலை. இம்மலையில் காற்று மழை இடி மின்னல் போன்ற இயற்கைப் பேரழிவுகள் நேர்ந்தாலும் இவ்வுலகமே சினத்துடன் எதிர்த்து நின்றாலும் இப்பாவையின் அழகு கெடுவதில்லை. ஆதலால் 'மாயா இயற்கைப் பாவை' என அழைக்கப்படுகின்றாள். இதனை

"மாயா இயற்கைப் பாவையின்

போதல் ஒல்லாள் என் நெஞ்சத்தானே"

என்று நற்றிணை குறிப்பிடுகிறது (Balasubramaniyam, 2007). தெய்வத்தால் பாதுகாக்கப்பெற்றத் தீமை இல்லாது விளங்கும் நீண்ட மலைச்சிகரங்களை உடையது கொல்லிமலை என்று இப்பாடல் வரிகள் சுட்டுகின்றன. இவைகொல்லிமலையில் தெய்வம் உறைந்துள்ளது என்பதை உணர்த்துகிறது.

"பயம் கெழுபலவின் கொல்லிக் குடவரைப்

பூதம் புணர்த்தபுதிது இயல் பாவை

விரிகதிர் இளவெயில் தோன்றிஅன்ன"

என்கிறது (Balasubramaniyam, 2007). கொல்லிமலையின் மேற்குப் பகுதியில் தெய்வத்தாலே வடிவம் அமைத்துவைக்கப் பெற்ற புதியவகையில் இயங்கக்கூடியது கொல்லிப்பாவை என்று குறிப்பிடுகின்றது. "குறிஞ்சி நில மக்கள் மலையின் உயரே குறிப்பிட்ட இடத்தில் மலைத்தெய்வம் குடியிருப்பதாக நம்பினர். அது மலையிலுள்ள ஒரு பாறைப் பகுதியாகவோ கல்லாகவோ இருக்கும். அதனை வழிபட்டனர்" (Subramaniyan, 2011). என்ற இக்கருத்து மலைத்தெய்வம் குகைகளில் சுனைகளில் மட்டுமல்ல பாறைகளிலும் உறைந்துள்ளதைப் புலப்படுகின்றது. இக்கொல்லிப்பாவை காடுகிழாளின் மற்றொரு உருவமோ எனச் சிந்திக்கத் தூண்டுகின்றது. இதனை "கொல்லித் தெய்வத்தின் தன்மை வித்தியாவாசினித் தெய்வத்தை ஒத்துக்காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். கொல்லிப்பாவை முதலில் தீயோரைக் கொல்லும் தெய்வமாகவே இருந்திருக்க வேண்டும்" என்கிறார் (Samy, 2011). அவரின் இக்கூற்று கொல்லிப்பாவை தீயோரை அச்சுறுத்தக் கூடிய கொடிய தெய்வம் என்பதை உணர்த்துகிறது.

மயிலை சீனி வேங்கடசாமி கொல்லிப்பாவை குறித்து பின்வரும் கருத்தினை விளக்குகிறார். "பழைய சங்க நூல்களில் கொல்லிப்பாவையைப் பற்றிக் கூறும்போது கொல்லிமலையில் இருந்த ஓர் அழகிய பெண் உருவமாகும் இது. சில உரையாசிரியர்கள் இக்கொல்லிப்பாவை ஒரு 'யசி' தெய்வம் என்றும் அங்கு செல்வோரை இது மயக்கி அழிக்கும் என்றும் கூறுவர். இந்த வியாக்கியானத்திலிருந்து, கொல்லிமலையில் எழுதப்பட்ட ஒரு சிற்ப உருவம் இது என்று தெரிகிறது. இக்கருத்துப் பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது" என்ற கருத்து பாவை என்பது பெண்தெய்வம் என்றும் (Mailai Seeni Venkatasamy 2018) அத்தெய்வம் வழியில் செல்வோரை அழிக்கும் என்றும் அது ஒரு சிற்ப உருவம் என்றும் குறிப்பிடுகின்றது. கொல்லிமலையைக் காவல் செய்யும் தெய்வம் கொல்லிப்பாவை என்கிறது சங்க இலக்கியம். "மேலைநாடுகளில் குறிப்பாகத் தொன்மங்கள் நிறைந்த கிரேக்க இலக்கியங்கள் இது போன்ற இயற்கைப் பூதங்களைக் காக்கின்ற காவல்களில் தெய்வங்கள் பல சுட்டப்படுகின்றன" (Santhirasekaran, 2012). மேற்காணும் கருத்துக்களின் அடிப்படையில் நோக்கும்போது 'கொல்லிப்பாவை மலையில் உறைந்திருக்கக்கூடிய அழகியபெண் தெய்வம்' என்பதும் மலையைக் காக்கும் காவல்தெய்வம் என்பதும் புலனாகின்றது.

மகளிரின் அழகிற்குப் பாவையை ஒப்பிட்டு, வடிவழகினையும் தோற்றப்பொலிவினையும், கலைத்தொழிலால் சிறப்பினையும் பெற்ற பாவை என

"உருவுகிளர் ஓவினைப் பொலிந்தபாவை

இயல்கற் றன்ன ஒதுக்கினள் வந்து"

என்கிறது (Jayabal, 2007). பாவையின் அழகியல் தன்மையின் சிறப்பைக் கூறுகின்றது. நற்றாய் தன் மகளின் அழகுபற்றித் தோழியிடம் குறிப்பிடும் போது, பாவையைப் போலும் பலராலும் ஆராயத்தக்க மாட்சிமைப்பட்ட அழகு என்று சுட்டுவதை

"பாவைஅன்ன பலர் ஆய் மாண் கவின்"

என்று அகநானூறு குறிப்பிடுகின்றது (Jayabal, 2007). கொல்லிப்பாவை போன்ற அழகினை உடையவள் என்பதை,

"பாவைஅன்ன வனப்பினள் இவள்"

என்கிறது நற்றிணை (Balasubramaniyam, 2007). இதுதன் மகளைப் பாராட்டிக் கூறியதை உணர்த்துகின்றது. மயில் பீலியில் காணப்பெறும் கண்ணைப் போன்ற மாட்சிமைப்பட்ட கூந்தலையுடைய பாவை போன்றவள் என்பதை

"மயிற்கண் அன்னமாண்முடிப் பாவை

நுண்வலைப் பரதவர்மடமகள்"

என்கிறது குறுந்தொகை (Nagarasan, 2007). இவ்வரிகள் கொல்லிப்பாவை போலத் தன்னுள் எழுதிக் கொண்ட வடிவத்தைக் குறிப்பிடுவதற்கு பாவை என்று சுட்டுகின்றன.

"தாஇல் நன் தைஇயபாவை

விண்தவழ் இளவெயிற் கொண்டுநின்றன்ன"

என்று அகநானூறும் கூறுவதால் பாவையை மகளிரின் அழகிற்கு உவமைப்படுத்தும் வழக்கம் இருந்துள்ளதற்குச் சங்கப்பாடல்கள் சான்று தருகின்றன. சங்ககாலத்தில் நடைபெற்ற இப்பாவை வழிபாடே பிற்காலத்தில் பாவை நோன்பாக மாறியுள்ளதை இச்சங்கப் பாடல்கள் விளக்குகின்றன (Jayabal, 2007).

## 2. நீர்த்துறைத்தெய்வ பாவைவழிபாடு

பாவைநோன்பிருந்தால் நல்லகணவர் கிடைக்கப்பெறுவார். மழைபொழியும், நாடுசெழிப்புறும் என்ற நம்பிக்கை நிலவி வருகிறது ஆதலால் பெண்கள் தைத்திங்களின் போது நீராடி நோன்பிருந்த

பின்னரே உணவு உண்டனர் என்பதை

"---------------------------------------------------நோன்பியர்

கை ஊண் இருக்கையின் தோன்றும் நாடன்"

என்கிறது (Balasubramaniyam, 2007). சங்ககாலத்தில் தைத்திங்களின் அதிகாலையில் மகளிர் நீராடிதழையாடையை உடுத்திக்கொண்டு ஊது கொம்புகள் ஒலிக்க வண்டற்பாவையை வைத்து நீர்த்துறையில் குரவைக் கூத்தாடியதை

"வண்டற் பாவைஉண்துறைத் தரீஇ

திருநுதல் மகளிர்குரவைஅயரும்

பெருநீர்க் கானல் தழீஇய இருக்கை"

என்று அகநானூறு குறிப்பிடுகின்றது (Jayabal, 2007). இப்பாடல்வரிகள், பண்டைக் காலத்தில் தைமாதத்தில் அதிகாலையில் மகளிர் நீராடி வண்டற் பாவையை நீர் உண்ணும் துறையில் வைத்து விளையாடும் நோன்புடையவர் என்பதைஉணர்த்துகின்றன. பெண்கள் தைத்திங்களின் போதுநீராடி நோன்பிருந்த பின்னரே உணவு உண்டனர் என்பது நல்லகணவர் கிடைக்கப்பெறுவர் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் வழிபட்டது தெரிகிறது. இப்பாவை வழிபாட்டு முறையே பிற்காலத்தில் திருவெம்பாவையும் திருப்பாவையும் தோன்றுவதற்கு வழிவகுத்துள்ளன.

இக்கருத்தின் மூலம் கொல்லிமலையில் உறையும் கொல்லிப்பாவை ஓர் அழகியபெண் உருவமாகும். தெய்வத்தால் உருவாக்கப்பெற்ற அழகுப் பாவை. இது மிகவும் பேரழகுவாய்ந்தது. கடவுள் தன்மை பெறக்கூடியது. கொல்லிமலையில் காவல் செய்யும் காவல் தெய்வம் என அறிந்துகொள்ள முடிகின்றது.

## முடிவுரை

கொல்லிமலையில் உறையும் கொல்லிப்பாவை மிகவும் பேரழகு வாய்ந்தது. இது ஓர் அழகிய பெண் உருவம். தெய்வத்தால் உருவாக்கப்பட்ட அழகுப் பாவை. இது கடவுள் தன்மை பெறக்கூடியது. இயற்கையின் சீற்றங்களைக் கண்டு அஞ்சிய மனிதன் இயற்கையைத் தெய்வமாக கருதி வழிபட்டுள்ளான் ஆதலால் மலையில் தெய்வம் உறைவதாக எண்ணி கொல்லிப்பாவையை தெய்வமாக வழிபட்டுள்ளனர். இக்கொல்லிப்பாவை கண்டோரை மயக்கி அச்சுறுத்தும் தெய்வமாக இருந்துள்ளது. பெண்களின் அழகுக்கு சான்றாக சங்கப்புலவர்கள் கொல்லிப்பாவையைக் கையாண்டுள்ளனர். கொல்லிப்பாவை கொல்லிமலையில் கண்டோரை அச்சுறுத்தி காவல் செய்யும் காவல் தெய்வம் என அறிந்துகொள்ள முடிகின்றது. சங்ககாலத்தில் நடைபெற்ற இப்பாவை வழிபாடே பிற்காலத்தில் பாவை நோன்பாக மாறியுள்ளதை இவ்வாய்வுக் கட்டுரை வழி அறியமுடிகிறது

## References

Balasubramaniyam, K.V., (2007) Natrinai Moolamum Uraiyum, New century book house, Chennai, India.

Jayabal, R., (2007) Aganaanooru Moolamum Uraiyum, New century book house, Chennai, India.

Mailai Seeni Venkatasamy, (2018) Samayangal Valartha tamil, Naam Thamizhar Pathippagam, Chennai, India.

Naagarasan, V., (2007) Mathurai Kanchi - Pathupaattu Irandaam Paguthi Moolamum Uraiyum, New century book house, Chennai, India.

Nagarasan, V., (2007) Kurunthokai Moolamum Uraiyum, New century book house, Chennai, India.

Paandurangan, A., (2016) Sanga illakiyam (Samayam, vazhipaadu, Arasu, Samoogam), New century book house, Chennai, India.

Samy, P.L., (2011) Tamil Illakiyathil Thaai theiva vazhipaadu, New century book house, Chennai, India.

Santhirasekaran, R., (2021) Sanga Illakiyam karuthiyal vazham, Mahakavi Bharathiar Noolagam, Coimbatore, India.

Subramaniyan, G., (2011) Sangakala Samuthayam, New century book house, Chennai, India.

Vaiduriyammal. P., (2006) Ettuth thogail Paavai - Sol vilakkam (Katturai), Sanga Illakiyathil, Department of tamil, Sri parashakthi Womens college, Kutraalam, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License